**சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள்**

**முன்னிலை :** முனைவர்.சி.உஷாராணி,

**ந.க.எண்.125746/பி1 /2019** **நாள். 21 .03.2020**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு – முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மார்ச் / ஏப்ரல் 2020 பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வினை ஒத்தி வைத்தல் – அறிவுரை வழங்குதல் – சார்பு.

**பார்வை :** மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அறிவிப்பு, நாள்.21.03.2020

---

**ஆணை :**

தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்தொற்றினை தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் **27.03.2020** முதல் **13.04.2020** வரையிலான நாட்களில் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட **பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் ஒத்தி வைக்கப்படுவது** தொடர்பாக முதன்மைக் கல்வி அலுவலர்கள்/மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் 27.03.2020 முதல் 13.04.2020 வரையிலான நாட்களில் நடைபெறும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்ட **பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு ஒத்தி வைக்கப்படுகிறது.**

2. தற்போது நடைபெற்று வரும் **மார்ச் 2020 பருவத்திற்கான மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் 23.03.2020** மற்றும் **26.03.2020 ஆகிய இரு நாட்களிலும், மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் 24.03.2020 அன்றும் ஏற்கனவே திட்டமிட்டபடி நடைபெறும்.**

3. மேற்குறிப்பிட்டவாறு ஒத்தி வைக்கப்படும் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் நடைபெறும் நாட்கள் குறித்த விவரம், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் பின்னர் அறிவிக்கப்படும்.

4. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு, பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ள விவரத்தினை, அவர்களது பள்ளிகளில் பயிலும் சம்பந்தப்பட்ட மாணாக்கர்கள் மற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் தெரிவிக்குமாறு அறிவுறுத்தவேண்டும்.

5. பத்தாம் வகுப்பு தேர்வு ஒத்தி வைப்பது தொடர்பான அறிவிப்பு அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளின் அறிவிப்பு பலகைகளிலும், அனைவரும் அறியும் வண்ணம் ஒட்டி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. முதன்மைக் கல்வி அலுவலர்கள், தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பத்தாம் வகுப்பு வினாத்தாள் கட்டுக் காப்பாளர்களுக்கும், தேர்வுகள் ஒத்தி வைக்கப்பட்ட விவரத்தினை தெரிவித்து, அரசுத் தேர்வுகள் இயக்ககத்திலிருந்து அடுத்த அறிவிப்பு வெளியிடப்படும் வரை எக்காரணம் கொண்டும் வினாத்தாள் கட்டுக் காப்பு மையங்களை திறக்கக்கூடாது என அறிவுறுத்த வேண்டும்.

7. வினாத்தாள் கட்டுக்காப்பு மையத்தில் 24 மணி நேரமும் ஆயுதம் தாங்கிய காவலர் பாதுகாப்பு பணியில் இருப்பதையும், கட்டுக்காப்பு மையத்தில் முதன்மைக் கல்வி அலுவலக பணியாளர் ஒருவர் பணியில் இருப்பதையும், முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்துக்கொள்ளவேண்டும்.

ஒம்/–

இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. இணை இயக்குநர் கல்வி பாண்டிச்சேரி.
3. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்
4. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை, சென்னை –9
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. பள்ளிக் கல்வி ஆணையர், பள்ளிக் கல்வி இயக்ககம், சென்னை–6
   – தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. இயக்குநர் பள்ளிக் கல்வித் துறை, சென்னை–6
4. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை–6
5. இயக்குநர் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை–6